நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.
நாள். 09.01.2019.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் நாள். 09.01.2019 ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கீழ்கண்ட பொருட்களைப் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. பொருள் :– இந்நகராட்சி பொறியாளர் திரு.ஆர்.திருமலைவாசன் அவர்களின் டிசம்பர் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 1116/2016/சி1)

தீர்மான எண்: 524
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2. பொருள் :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் இந்நகர்ப்பகுதியில் பெரும்பாலான தெருக்கள் மற்றும் முக்கிய சாலைகள் சேதமடைந்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதால் 2018–2019ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித்திட்டத்தின் (IUDM) கீழ் ரூ.500.00 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட விபரப்படி பேவர் ப்ளாக் சாலைகள் அமைப்பதற்கு சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கக் கோரியும் மற்றும் இந்நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு அதற்கான மதிப்பீட்டுத் தொகையினை முழு மான்யமாக வழங்கக் கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | நீளம் மீ. | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | 1,3,4,9,10, 11,12,13, 14 & 15 | இந்நகராட்சி வைத்தியநாதபுரம் பகவதியம்மன் கோவில் தெரு, வடக்கு பாரஸ்ட் ரோடு, குருசடி தெரு, அந்தோணியார் கோவில் தெரு, மயானக்கரை ரஸ்தா, பொது மயானம் சாலை, காயிதேமில்லத் நகர், வரதப்பர் குறுக்கு தெரு, மகாத்மா காந்திஜி குறுக்கு தெரு, குமார் தெரு மற்றும் குறுக்கு தெரு, மில்லர் ரோடு மற்றும் குறுக்கு தெரு, எல்.ஜி.ஜி.எஸ். காலனி, கல்லார் ரோடு, என்.ஜி.ஓ. காலனி, காவல் நிலையம் சாலை, 10ம் பகுதி நடுநிலைப்பள்ளி சாலை, 7ம் பகுதி நடுநிலைப்பள்ளி சாலை, நகராட்சி | 8240 மீ | 250.00 |

| வ. எண். | வார்டு எண் | பணியின் விபரம் | நீளம் மீ. | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| | | அலுவலகம் சாலை, புதிய பேருந்து நிலையம் சாலை ஆகிய பகுதிகளில் அச்சுக் கற்கள் பதிக்கும் பணி செய்தல் | | |
| 2. | 16,19,20, 24,27,28, 29 & 30 | இந்நகராட்சி இடுக்கடி லாட் தெரு, முத்துராஜா குறுக்கு தெரு, வாகம்புளி குறுக்கு தெரு, வாகம்புளி புறவீதி சாலை மற்றும் குறுக்கு தெரு, அர்ச்சுணர் சந்து, தண்டுபாளையம் பள்ளிவாசல் குறுக்கு தெரு, சந்தை தெரு, பட்டாளம்மன் கோவில் குறுக்கு தெரு, தோட்டி காலனி குறுக்கு தெரு, செயின்ட் சேவியர் முதல் மற்றும் இரண்டாவது தெரு, அம்பேத்கார் மெயின் சாலை, அரண்மனை குறுக்கு தெரு, அன்னபாக்கியம் மண்டபம் சாலை, அன்னபாக்கியம் மருத்துவமனை சாலை, நகராட்சி குடியிருப்பு சாலை, நகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பு சாலை, என்.ஜி.ஓ. காலனி தண்ணீர் தொட்டி சாலை, வ.உ.சி. பூங்கா சாலை மற்றும் தலைமை குடிநீர் நிலைய சாலை ஆகிய பகுதிகளில் அச்சுக் கற்கள் பதிக்கும் பணி செய்தல் | **7850 மீ** | **250.00** |
| | | மொத்தம் | **16090 மீ. (or) 16.09 கி.மீ.** | **500.00** |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

**2018–2019** ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தித்திட்டத்தின் (IUDM) கீழ் ரூ.**500.00** லட்சம் மதிப்பீட்டில் சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கக் கோரியும் மற்றும் அதற்கான மதிப்பீட்டினை முழு மானியமாக வழங்கக் கோரியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 41/2018/இ1)**

தீர்மான எண்: 525

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. <u>பொருள்</u> :– கோவை, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையத்திற்கு, **2018–19**ம் ஆண்டிற்கான ஆண்டு பங்குத்தொகை ரூ.**20,000/–** (ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2811/2018/சி1)**

தீர்மான எண்: 526

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான வணிக கடைகளில் கீழ்காணும் விபரப்படி உள்ள கடைகள் நீண்ட காலமாக பூட்டிய நிலையில் பயன்பாடின்றி உள்ளது. மேலும் மேற்படி கடைகளின் உரிம காலம் முடிவுற்று நீண்ட காலங்கள் ஆனதால் இந்நகராட்சி மூலம் பலமுறை உரிமம் நீட்டிப்பு செய்திடுமாறு கடைகளின் உரிமதாரர்களை அறிவுறுத்தியும் பூட்டிய நிலையில் உள்ளதால் எவ்விதமான பதிலும் அளிக்கப்படவில்லை. மற்றும் கீழ்காணும் கடைகளுக்கு செலுத்தப்பட்ட வைப்பு தொகைகளை மாத வாடகை நிலுவைத் தொகைக்கு ஈடு செய்து கொண்டு, ஏற்படவிருக்கும் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், மீதம் உள்ள நிலுவைத் தொகைகளை வசூலிக்க சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், கீழ்காணும் விபரப்படி உள்ள கடைகளை பொது ஏலத்துடன் கூடிய மறு ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், கேட்புகளை நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | **கடைவிபரம்** | குத்தகை உரிமதாரர் விபரம் |
|---|---|---|
| 1 | கடை எண். 2<br>புதிய பேருந்து நிலையம் வணிக வளாகம் (2015031) | V.P. ராஜா |
| 2 | கடை எண். 3<br>புதுப்பாலம் வணிக வளாகம், (2005253) | S. முருகன் |
| 3 | கடை எண். 11<br>பழைய மீன் மார்க்கெட் வணிக வளாகம், (2015024) | N.T சந்திரசேகரன் |
| 4 | கடை எண்.13<br>மகப்பேறு மருத்துவமனை வணிக வளாகம் (2005246) | நாகஜெயந்தி |

<u>அலுவலகக்குறிப்பு</u> :–

அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 1491/2011/அ2)
தீர்மான எண்: 527
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகளுக்கு உரிய காலம் முடிவடைந்துவிட்டதால் மேற்படி உரிய காலத்தினை கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி நீட்டிப்பு செய்து வழங்கிட உரிமதாரர்கள் அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண். | **உரிமதாரர் விபரம் மற்றும் கடை விபரம்** | பழைய மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | K. மூக்கையா<br>மகப்பேறு மருத்துவமனை வணிக வளாகம் கடை எண்.15 (20052277) | 891/– | 1025/– | 07.06.2017 முதல் 06.06.2020 வரை (மூன்றாவது உரிமம்) |
| 2 | P. விஜயரெங்கன்<br>V.R.B வணிக வளாகம் கடை எண்.3 (2015025) | 2000/– | 2300/– | 01.10.2018 முதல் 31.09.2021 வரை (இரண்டாவது உரிமம்) |

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007—ன்படி மேற்படி கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகள் உரிமம் நீட்டிப்பு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :—

மேற்காணும் கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 4886/2007/அ2)
தீர்மான எண்: 528
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. பொருள் :— பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகளுக்கு உரிம காலம் முடிவடைந்துவிட்டதால் மேற்படி உரிய காலத்தினை கலம் எண்.5—ல் கண்டுள்ளபடி நீட்டிப்பு செய்து வழங்கிட உரிமதாரர்கள் அளித்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | உரிமதாரர் விபரம் மற்றும் கடை விபரம் | பழைய மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | R. செந்தில்குமார் நகராட்சி அலுவலக வளாகத்தின் அருகில் உள்ள உணவகம் | 6325/— | 7174/— | 01.03.2019 முதல் 28.02.2022 வரை (இரண்டாவது வரை உரிமம்) |

அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007—ன்படி மேற்படி கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகள் உரிமம் நீட்டிப்பு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :—

மேற்காணும் கடைகளுக்கு பழைய மாத வாடகையிலிருந்து 15% உயர்வு செய்யப்பட்ட தொகையை மாத வாடகையாக வசூலிக்கவும் உரிமம் முடிவுற்ற காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 4886/2007/அ2)
தீர்மான எண்: 529
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண். TN60K4844 (மினி லாரி) தகுதிச்சான்று (F.C) 05.02.2019ல் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறுவதற்கு பழுது பணிகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.90,000/— (ரூபாய் தொன்னுராயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய்நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2324/2017/எச்1)
தீர்மான எண்: 530
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. பொருள் :– இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 21 மற்றும் ஒப்பந்தப்பணியாளர்கள் 63 மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நூறு சதவிகிதம் (100%) வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், குப்பைகளை தரம் பிரித்து வாங்குதல், உரம் தயாரித்தல், புதிய பேருந்து நிலையம் பராமரித்தல், தினசரி மார்க்கெட் மற்றும் வணிக பகுதிகளில் துப்புரவு பணிமேற்கொள்ளுதல், சமுதாய மற்றும் பொது கழிப்பறைகளில் துப்புரவு பணிமேற்கொள்ளுதல், முதல்நிலை குப்பை சேகரிக்கும் வாகனங்களை இயக்குதல் போன்ற பணிகளை திறம்பட செயலாக்கம் செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்28369/ஜே3/2018, நாள்.22.11.2018ன்படி கூடுதலாக 80 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணிமேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தற்போது நகராட்சியில் நிதி நிலைமை பற்றாக்குறை காரணமாக முதற்கட்டமாக 25 நபர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் தொகை ரூ.35,00,000/– (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : –

1. வார்டு எண்.1 முதல் 30 வரை உள்ள வார்டுகளில் பொது சுகாதாரப்பணிகள் 25 ஒப்பந்தப்பணியாளர்கள் மூலமாக பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் தொகை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0025/2019/எச்1)
தீர்மான எண்: 531
தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

9. பொருள் :– பெரியகுளம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஏழைமக்களின் வாழ்வாதரத்தின் உயர்விற்காகவும் மற்றும் மக்கள் ஆக்கிரமிப்பு குடியிருப்பவர்களை அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வேறு இடங்களில் புதிய குடியிருப்பு அமைத்து தருவதற்கு செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்றுவாரியம், மதுரை அவர்களிடமிருந்து ந.க.எண்.901/AE (P)/2018, நாள்.29.11.2018ல் கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி இந்நகராட்சி தென்கரைப்பகுதியில் அம்பேத்கார் நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகரளவு எண்.2032/1,2, 2033, 2034க்கு கட்டப்பட்டுள்ள சுமார் 3.4 ஏக்கர் இடத்தினை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திற்கு நகராட்சி பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு இந்நகராட்சி இடத்தினை வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கருத்துரு பெறும்பொருட்டு கடிதம் அனுப்ப மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறும் பொருட்டு கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேலனுப்பலாம்.

(ந.க.எண்.2752/2018/எப்1)

தீர்மான எண்: 532

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10. பொருள் :– பெரியகுளம் நகராட்சி பகுதியில் வராக நதியின் குறுக்கே வடகரை மற்றும் தென்கரை பகுதியை இணைக்கும் ஆடுபாலத்தினை இடித்து தற்போது பொதுப்பணித்துறையினரால் கட்டப்பட்ட தரைப்பாலப்பகுதியில் மின்விளக்குகள் இல்லாததால் சமூக விரோத செயல்கள் அதிகளவில் நடைபெறுவதை தவிர்க்க வேண்டி மேற்படி பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைத்து தருமாறு 27.12.2018ம் தேதியில் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்கண்ட புதிய தரைப்பாலம் பகுதியில் மின்பாதை மற்றும் மின்கம்பங்கள் அமைத்து 6 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்க ரூ.2.50 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதன்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 52/2019/இ1)

தீர்மான எண்: 533

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

11. பொருள் :– பெரியகுளம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 30 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்படி பணி மூலம் கம்பம் சாலை பகுதியில் இந்தியா கார்டன் உணவகம் முதல் அம்சம் மஹால் சாலை சந்திப்பு வரை நெடுஞ்சாலை துறை அனுமதி பெறாததால் புதியதாக குடிநீர் குழாய் பதிக்கப்படவில்லை. இதனால் அப்பகுதியில் சுமார் 15க்கு மேற்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்க இயலாமல் உள்ளதால் அப்பகுதி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. இதனால் தற்காலிக தீர்வாக இந்நகராட்சி குடிநீர் வாகனம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பகுதியில் நெடுஞ்சாலை துறையினர் மூலம் உரிய அனுமதி பெற்று பழுதடைந்த பழைய பி.வி.சி. பைப்பிற்கு பதிலாக புதிய 3ò G.I பைப்புகள் மற்றும் உபரி சாமான்கள் கொண்டு இந்தியா கார்டன் உணவகம் முதல் அம்சம் மஹால் அமைந்துள்ள சாலை சந்திப்பு வரை கம்பம் மெயின் சாலையில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிக்கு ரூ.2.00 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டதன்படி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 53/2019/இ1)

தீர்மான எண்: 534

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

12. பொருள் :– இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை களப்பணிகள் மேற்கொள்ள விநாயகா சுயஉதவிக்குழுவின் மூலம் வீடு வீடாகச்செல்லும் களப்பணியாளர்கள் (DBC) 30நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் தேனி மாவட்டம் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தில் தொடர்ந்து 01.07.2018 முதல் 31.12.2018 வரை ஆறுமாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்து இந்நகர்மன்ற தீர்மானம் எண்435, நாள்.14.08.2018ல் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.2571/2017/ஜே1, நாள்.23.04.2018ன்படி நகர்பகுதிகளில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை அடிப்படையில் 300 வீடுகளுக்கு 1 களப்பணியாளர் என்ற விகிதத்தில் மொத்தம் 11471 வீடுகளுக்கு 38 களப்பணியாளர்கள் தேவை என்பதால் கூடுதலாக 8 களப்பணியாளர்கள், இந்நகராட்சி நகர்மன்றம் தீர்மானம் எண்.475, நாள்.11.10.2018ன்படி அனுமதிக்கப்பட்டு விநாயகா சுயஉதவிக்குழு மூலமாகவே அதே நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 31.12.2018 உடன் முடிவடைவதால் தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் விலைவிகித அடிப்படையில் 2019ம் ஆண்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி 38 களப்பணியாளர்கள்(DBC) ஈடுபடுத்தி கொசுப்புழு ஒழிப்பு களப்பணி செய்வதற்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களிடம் பிரேரணை அனுப்பி அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கும் 2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்யும்வரை மேற்படி விநாயகா சுயஉதவிக்குழுவின் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8977/2016/இ2, நாள்.11.06.2018ன்படி தினக்கூலி விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சி நகர்மன்றம் தீர்மானம் எண் 510, நாள்.06.12.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்யும் வரை டெங்குகாய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதன் அவசியம் கருதி மாவட்ட ஆட்சித்தலைவர்,தேனி அவர்களின் தற்போதைய ஊதிய விகிதமான ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு ரூ.213/– வீதம் 38 பணியாளர்கள் கொண்டு (01.01.2019 முதல் 30.06.2019 வரை) ஆறுமாத காலத்திற்கு தற்போது பணி மேற்கொள்ளும் விநாயகா சுயஉதவிக்குழு மூலமாகவே பணிமேற்கொள்ளவும், மேற்படி பணிக்கான தோராய செலவினம் தொகை மாதம் ஒன்றிற்கு ரூ.2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : –

1. வார்டு எண்.1 முதல் 30 வரை உள்ள வார்டுகளில் டெங்குகாய்ச்சல் தடுப்புநடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 2019ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணியாளர்கள் நியமனம் செய்யும் வரை ஆறுமாத காலத்திற்கு மேற்படி விநாயகா சுயஉதவிக்குழுவின் மூலமாகவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தில் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினம் தொகை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 296/2017/எச்1)

தீர்மான எண்: 535

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ரா. கமலா
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி